# தேவ வல்லமை



தொகுப்பு:
**வாட்சன் குட்மேன்**

இலவசம் —
**விற்கக்கூடாது**

# தேவ வல்லமை

ஒரு சிறு அறிவெல்லைக்குட்பட்ட மனிதன், அனைத்துக் காரியங்களிலும் ஆற்றல் படைத்தவரும், நம்மைச் சிருஷ்டித்தவருமான எல்லையற்ற தேவனின் வல்லமையை எப்படி விவரிக்க முடியும்? போதுமான அளவில் இதைக் குறித்து விளக்கமுடியாது. ஏனெனில் தேவன் மிகவும் வல்லமையுள்ளவராகவும், பெரியவராகவும், வியாபித்திருக்கிறவராகவுமிருக்கிறபடியால் நமது சிற்றறிவைக் கொண்டு எல்லாவற்றையும் விவரிக்கவே இயலாது.

ஆனால் தேவன் தம்மைக்குறித்து பைபிள் என்ற தமது நூலில், மனுஷனாலே கூடாத எந்தக் காரியமும் தேவனாலே கூடும் என்ற தேவனுடைய வல்லமையைக் குறித்த பரந்த, திறந்த கருத்துக்களை நமக்கு வெளிப்படுத்திக் கொடுத்திருக்கிறார். இப்போது நாம் தேவனுடைய அளவற்ற வல்லமை பற்றிய அவருடைய வெளிப்படுத்துதல்களை தேவனுடைய வார்த்தையிலிருந்து காண்போம்.

—வாட்சன் குட்மேன்

# சிருஷ்டிப்பில் தேவ வல்லமை 1

எரேமியா 10:12

அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினுல் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினுல் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினுல் விரித்தார்.

எரேமியா 32:17

ஆ, கர்த்தராகிய ஆண்டவரே! இதோ தேவரீர் உம்முடைய மகா பலத்தினுலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினுலும், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

எபிரேயர் 1:1a, 2

தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினுர்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினுர்.

## 2 ஒரு கிரகத்தைப் படைத்து அதை அந்தரத்தில் தொங்கவிட சாத்தானுல் முடியாது.

யோவான் 1:1, 3, 10:10a

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது... சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. ... திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறுனேயன்றி வேறென்றுக்கும் வரான்.

லூக்கா 10:18

அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்ருர்.

1 பேதுரு 5:8

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிருன்.

*சங்கீதம் 62:11*

தேவன் ஒருதரம் விளம்பினூர். இரண்டு தரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே.

*சங்கீதம் 115:3*

நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறூர். தமக்கு சித்தமான யாவையும் செய்கிறூர்.

*ஏசாயா 43:13*

நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன். என் கைக்குத் தப்புவிக்கத் தக்கவன் இல்லே.

கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும், உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும். உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்? — உபாகமம் 3:24

# 4 முடிவில்லாததும், மகத்துவமுமான தேவ வல்லமை

உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்; உம்முடைய கோபாக்கினியை அனுப்பினீர். அது அவர்களை தாளடியைப் போலப் பட்சித்தது. — யாத்திராகமம் 15:7

சங்கீதம் 147:5

நம்முடைய ஆண்டவர் பெரியவரும், மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார். அவருடைய அறிவு அளவில்லாதது.

சங்கீதம் 106:8

ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்.

சங்கீதம் 104:1

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி. என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர். மகிமையையும், மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்.

# நித்தியமான தேவ வல்லமை

2 பேதுரு 1:11

இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கும் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

ஏசாயா 26:4

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.

சங்கீதம் 90:2

பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

எரேமியா 10:10

கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன். நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்க மாட்டார்கள்.

# 6 செங்கடலில் அற்புதம் செய்த தேவ வல்லமை

*யாத்திராகமம் 14:21, 22, 26-28, 30, 31a*

மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினுன், அப்பொழுது கர்த்தர் இரா முழுவதும் பலத்த கீழ்க்காற்றினுல் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினுர். ஜலம் பிளந்து, பிரிந்து போயிற்று. அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர் மேலும் அவர்கள் இரதங்கள் மேலும், அவர்களுடைய குதிரை வீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன்கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றுர். அப்படியே மோசே தன் கையை நீட்டினுன். விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வந்தது: எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப் போட்டார். அவர்களில் ஒருவனுகிலும் தப்பவில்லை... கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்.

# தேவனால் கூடாத அற்புதம் இல்லை

## 10 லட்சம் ஜனங்களை 40 வருஷம் போஷித்தார்

*யாத்திராகமம் 16:12b-15a, 35a*

சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றிப் பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கிய பின், இதோ வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின்மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பதுவருஷமளவும் மன்னாவைப்புசித்தார்கள்.

## கரை புரண்டோடும் நதி நின்றது *யோசுவா 3:17a*

சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையில் காலூன்றி நிற்கும் போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாகக் கடந்து போனார்கள்.

# தேவன் மிகப் பெரிய இரட்சகர்

## தானியேல் 3:21, 22, 27

அப்பொழுது அவர்கள் தங்கள் சால்வைகளோடும், நிசார்களோடும், பாகைகளோடும், மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப் பட்டார்கள். தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், ராஜாக்களின் மந்திரிகளும் கூடி வந்து, அந்தப் புருஷருடைய சரீரங்கள் மேல் அக்கினி பெலஞ் செய்யாமலும், அவர்களு டைய தலைமயிர் கருகாமலும் அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.

## தானியேல் 6:14, 21, 22

அப்பொழுது ராஜா கட்டளையிட, அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனை சிங்கங்களின் கெபியிலே போட்டார் கள். அப்பொழுது தானியேல்: ராஜாவே நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்.

எரேமியா 23:29

என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எபிரேயர் 4:12

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே? — சங்கீதம் 119:9

## 10 கிறிஸ்து இயேசுவே மாம்சத்தில் வந்த தேவன்

கொலோசெயர் 2:9

ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

மத்தேயு 1:23-25

இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். — ரோமர் 1:5

இயேசு கிறிஸ்துவினுலும்... இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றினுர்.—வெளிப்படுத்தல் 1:5a, 8

கொலோசெயர் 1:13-16

அவருக்குள் (கிறிஸ்து) அவருடைய இரத்தத்திஞலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்ருல் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களாஞலும், கர்த்தத்துவங்களாஞலும், துரைத்தனங்களாஞலும், அதிகாரங்களாஞலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கெனவும் சிருஷ்டிக்கப்பட்டது.

இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சகலத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினுலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார். — எபிரேயர் 1:3

நானும், பிதாவும் ஒன்றுயிருக்கிறேம். பிதா என்னிலும், நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றுர்.

— யோவான் 10:30,38

அவர் மனுஷ குமாரனுயிருக்கிறபடியால், நியாயத் தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறுர். —யோவான் 5:27

## தேவத்துவத்துவத்தில் அவர் சர்வ வல்லவர்

*பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்ருயிருக்கிருர்கள். —1 யோவான் 5:7*

*பேதுரு அனனியாவை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்தாவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்தில் இப்படிப்பட்ட எண்ணம் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்ஞய் என்ருன். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனைவிட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. — அப்போஸ்தலர் 5:3-5*

# தேவனுடைய வல்லமை

எபிரேயர் 7:25

மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

யூதா 24

வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்...

தீமோத்தேயு 1:12b

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காக்க வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

*பிலிப்பியர் 3:21a*

அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே

*தானியேல் 4:37*

ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் எல்லாம் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினன்.

*எபிரேயர் 2:18*

ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயுமிருக்கிருர்.

2 தீமோத்தேயு 3:15

கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

ரோமர் 14:4

மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறார்.

எபேசியர் 3:20,21

நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும், சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக! ஆமென்.

சங்கீதம் 130:3,4

கர்த்தாவே, நீர் அக்கிரமங்களை கவனித்திருப்பீரானால், யார் நிலை நிற்பான். ஆண்டவரே, உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு.

மாற்கு 2:9-12

உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான்.

# 18 ஆத்துமாவை குணமாக்கும் கிறிஸ்துவின் வல்லமை

*2 கொரிந்தியர் 5:17*

இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின.

*யோவான் 11:26*

உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா என்றார்.

*ரோமர் 5:21*

ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது.

லூக்கா 5:17

பின்பு ஒரு நாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிற போது கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலிருந்து வந்த பரிசேயரும், நியாய சாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள்: அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று.

லூக்கா 8:43,44

அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன்னுடைய ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ, அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய பெரும்பாடு நின்று போயிற்று.

# 20 சகல வியாதிகளையும் குணமாக்கும் கிறிஸ்துவின் வல்லமை

இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான். —மத்தேயு *8:3*

அந்தச் சமயத்திலே நோய்களையும், கொடிய வியாதிகளையும், பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங்குருடருக்கும் பார்வையளித்தார். —லூக்கா *7:21*

அவர் ஒரு கிராமத்திலே பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று... அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். — லூக்கா *17:12,14*

## சகல வியாதிகளையும் குணமாக்கும் கிறிஸ்துவின் வல்லமை 

மத்தேயு 9:28-30

அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமையுண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம் ஆண்டவரே! என்றார்கள். அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.

மத்தேயு 12:13

பின்பு அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான். அது மறு கையைப் போல் சுத்தமாயிற்று.

## 22 சகல வியாதியையும் குணமாக்க வல்லவர் இயேசு

யாக்கோபு 5:14,15

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக... அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்.

மத்தேயு 4:23

பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார்.

மத்தேயு 14:36

அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள். தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

மத்தேயு 17:18

இயேசு பிசாசை அதட்டினார்: உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது. அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்த மானான்.

லூக்கா 4:41

பிசாசுகளும்: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்.

மத்தேயு 12:22

அப்பொழுது பிசாசு பிடித்த குருடும், ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான். குருடும், ஊமையுமானவன் பேசவுங் காணவும் தக்கதாக அவனை சொஸ்தமாக்கினார்.

# 24 மரித்தவர்களை உயிருடனெழுப்பும் கிறிஸ்துவின் வல்லமை

லூக்கா *7:14,15*

கிட்ட வந்து, பாடையைத் தொட்டார்: அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர்: வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.

லூக்கா *8:49, 54, 55*

அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவரை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள். போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான், எல்லோரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப்பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்பவந்தது: உடனே அவள் எழுந்திருந்தாள்.

# உயிர்த்தெழுதலைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்கள் 

யோவான் 5:25

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 5:28:29

இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம்வரும். அப்பொழுது நன்மைசெய் தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்

II கொரிந்தியர் 4:14

கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்.

*மத்தேயு 28:18*

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*ரோமர் 1:20*

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.

*1 பேதுரு 3:22*

அவர் பரலோகத்திற்குப் போய் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்: தேவதூதர்களும் அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

## அனைத்தையும் அறிந்தவர்

மத்தேயு 17:27

ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்து பார். ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய். அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

யோவான் 2:25

மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.

ரோமர் 2:16

என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும்.

## ஜலத்தின் மேல் நடந்தார்

### மத்தேயு 14:25

இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

## காற்றையும் கடலேயும் அடக்கினுர்.

### மத்தேயு 8:26

அதற்கு அவர்: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து, காற்றையும் கடலேயும் அதட்டினுர். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று:

## பூமியை நிலேப்படுத்தினுர்

### கொலோசெயர் 1:16b,17

சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலே நிற்கிறது.

ரோமர் 6:9

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

ரோமர் 8:1

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

அவருடைய ராஜ்யத்தின் வல்லமை

1 கொரிந்தியர் 4:20

தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.

### அவர் ஜீவாதிபதி

### யோவான் 17:2

நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு, மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரம் கொடுத்தபடியே...

### அவர் மரித்தபோது பூமி அதிர்ந்தது

### மத்தேயு 27:50:51b

இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்... பூமியும் அதிர்ந்தது.

### பரலோக மகிமையின் பிரகாசம்

### மத்தேயு 17:2

அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.

## பாவங்களை மன்னிக்கிறார்

### மத்தேயு 9:6

பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி (திமிர்வாதக்காரனை நோக்கி) நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.

## நித்திய ஜீவனை அளிக்கிறார்

### யோவான் 10:27,28a

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது: நான் அவைகளை அறிந்திருக்கிறேன்: அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்.

# 32 கிறிஸ்து என்ற நாமத்தின் வல்லமை

*பிலிப்பியர் 2:9,10*

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்

*யோவான் 20:31*

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றுநீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

*அப்போஸ்தலர் 3:6,7*

அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை: என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கி விட்டான்.

எபேசியர் 1:7

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

லூக்கா 22:20b

இந்தப் பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது.

வெளிப்படுத்தல் 2:11b

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

வெளிப்படுத்தல் 7:14b

இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்: இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

## 34 தேவனுடைய வல்லமைக்காக அவரைத் துதியுங்கள்

வெளிப்படுத்தல் 5:12

அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறூர் என்று சொன்ஞர்கள்.

சங்கீதம் 102:17,18

அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்... சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்.

சங்கீதம் 9:11

சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்

# நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?



மத்தேயு 19:16-21

நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்... நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக, உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அதற்கு அவர் நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்: பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார்.

# 36 கிறிஸ்துவே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறர்

எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.
—யோவான் 1:17

அதற்கு இயேசு: நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.
—யோவான் 14:6

இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும், குமாரனேயும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து —1 யோவான் 2:22

அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.
—யோவான் 1:4

## எபிரேயர் 9:24-28

அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக, தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார். அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு, ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

# 38 எந்தப் பாவியையும் மீட்கும் இயேசுவின் வல்லமை

*1 தீமோத்தேயு 1:15*

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது: அவர்களில் பிரதான பாவி நான்.

*ரோமர்: 1:16*

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்... விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.

*11 பேதுரு 1:10*

ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

யோவான் 3:16

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

ஆ! மனிதனுக்கு இரட்சிப்பை அருளிய மாகிருபை! அனைத்தையும் சிருஷ்டித்த ஆண்டவர் நமக்காக மரித்தார்.

லூக்கா 23:34,46

அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்... பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்: இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்.

# 40 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இப்பொழுதே உன்னை ஒப்புக்கொடு

1 யோவான் 1:9

பாவங்களை அறிக்கையிடு, மனந்திரும்பு! நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியுமுள்ளவராயிருக்கிறார்.

அப்போஸ்தலர் 3:20

உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.

1 யோவான் 5:11,12

தேவனுடைய குமாரனை விசுவாசியுங்கள். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

## அச்சத்திற்குப் பதிலாக அன்பு

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். —2 தீமோத்தேயு 1:7

அன்பிலே பயமில்லை: பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்: பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. —1 யோவான் 4:18

## பகைக்குப் பதிலாக அன்பு

தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? —1 யோவான் 4:20

# 42 மெய் விசுவாசிகளிடத்தில் தேவனுடைய வல்லமை

## எபிரேயர் 13:5

### கைவிடாமல் காப்பவர்

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்: நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.

## யோவான் 14:27

### குழப்பத்திற்குப் பதில் சமாதானம்

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக!

## நிச்சயமான உறுதிமொழி

*உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். —1 யோவான் 5:13*

## மாயமற்ற தூய்மை

*கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. —1 தீமோத்தேயு 1:5*

*நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக! —ரோமர் 15:13*

# 44 மெய் விசுவாசிகளிடத்தில் தேவனுடைய வல்லமை

பெலவீனத்திற்குப் பதிலாக பெலன்

கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

—எபேசியர் 6:10

அவநம்பிக்கைக்குப் பதிலாக நம்பிக்கை

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. —தீத்து 2:13

பொய்க்குப் பதில் மெய்

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். —யோவான் 8:32

*1 யோவான் 5:4*

தோல்விக்கு பதில் அன்பு

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

*1 பேதுரு 2:3*

வளர்ச்சியும், பூரணமும்

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய, களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் விசுவாசமாயிருங்கள்.

*எபேசியர் 4:15*

அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

## 46 மெய் விசுவாசிகளிடத்தில் தேவனுடைய வல்லமை

*எபேசியர் 3:16*

*உள்ளான மனிதனில் பெலன்*

*நீங்கள் அவருடைய ஆவியினால் உள்ளான மனுஷரில் வல்லமையாய்ப் பலப்படவும்...*

*1 கொரிந்தியர் 2:5*

*மனுஷ ஞானத்தைச் சார்ந்ததல்ல*

என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருக்கிறது.

*அப்போஸ்தலர் 1:8*

*அவருக்குச் சாட்சிகள்*

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது ...... பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்றார்.

யோவான் 17:15

நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

பிலிப்பியர் 4:7

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும்,உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

வெளிப்படுத்தல் 2:26

ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்.

நம்முடைய விசுவாசத்தின் மூலமே தேவன் பெரிய காரியங்களைச் செய்யமுடியும்.

மத்தேயு 21:22

நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய், ஜெபத்திலே எவை களைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

யோவான் 15:7,8

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்; எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

மாற்கு 9:23

இயேசு அவனை நோக்கி; நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.

# தேவனுடைய சிறந்த வாக்குத்தத்தங்கள்

## மாற்கு 11:24

ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.

## சங்கீதம் 37:4,5

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

## பிலிப்பியர் 4:19

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

Published in numerous languages by World Missionary Press, Inc. as God supplies funds in answer to prayer. If you would like more copies for prayerful distribution, specify which language(s) you need and how many booklets.

For more information or to request a free Bible study, please write to:

**WMP**
**India Bible Literature**
**67 Beracah Road**
**Kilpauk, Chennai 600 010**

Read booklets online or by App
www.wmp-readonline.org

Cover photo STSci-PRC2003-11a of Helix Nebula courtesy of NASA and STSci

www.wmpress.org 9-17 719 Tamil POG